**திருகோணமலை நகரசபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2016 செப்தெம்பர் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 01 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 திசெம்பர் 08 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களின் பாதிப்புக்களிற்கான தக்கங்களை தவிர, திருகோணமலை நகர சபையின் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு த்துவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் செயலாற்றலையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்குகள் தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சால் நன்கொடையாக 10 வாகனங்களின் பெறுமதி சபைக்கு அந்த வாகனங்களின் உரிமையாண்மை மாற்றப்பட்டிருந்த போதிலும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர சபையின் ஆயுரி வேத நிலையத்தின் களஞ்சியங்களில் இருந்த ரூபா 294,191 பெறுமதியான மருந்துகளின் இருப்பு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையால் பேணப்பட பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தண்ணீர் கட்டணங்களிலிருந்தான வருமானம் ரூபா 1,084,232 ஆகும். எவ்வாறாயினும், இது வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் ரூபா 1,056,045 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், தண்ணீர் கட்டணங்களிலிருந்தான வருமானம் ரூபா 28,187 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபையால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கடை வாடகையிலிருந்தான வருமானம் ரூபா 20,039,978 ஆகும். எவ்வாறாயினும், இது வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் ரூபா 16,620,905 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், காடை வாடகையிலிருந்தான வருமானம் ரூபா 3,419,073 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது எரிதொட்டியொன்று கொள்வனவு செய்வதற்கு சபையால் ரூபா 2,705,000 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் எரிதொட்டியொன்றின் கிரயமாக நிலையான சொத்துக்கின் கீழ் ரூபா 1,352,500 ஆன தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது சபைக்கு நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 9,900 பெறுமதியான புத்தகங்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) உத்தியோகத்தர் கடன் பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையாகவிருக்கின்ற கடன்களின் மீதி ரூபா 19,408,227 ஆகும் எவ்வாறாயினும், இது நிதிக்கூற்றுக்களிற்கு ரூபா 18,678,111 ஆக கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகவே, உத்தியோகத்தர் கடன்களின் தீதி ரூபா 730,116 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 16,887,724 மொத்த கிரயத்தில் சபையால் நிர்மாணிக்கப்பட்ட கருத்தரங்கு மண்டபம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையம் போன்ற கட்டிடங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சந்தை கட்டிடத்தொகுதி, சிகிசை நிலையம் மற்றும் தீயணைப்பு போன்ற கட்டிடங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபையால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், மீளாய்ாண்டிற்கான மதிப்பீட்டு வரியிலிருந்தான வருமானம் ரூபா 38,532,710 ஆகும். எவ்வாறாயினும், இது வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் ரூபா 30,992,531 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், மதிப்பீட்டு வரியிலிருந்தான வருமானம் ரூபா 7,540,179 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலுள்ள இருப்புக்களினன் பெறுமதி ரூபா 4,630,945 ஆகும். எவ்வாறாயினும், இது ஐந்தொகையில் ரூபா 2,946,536 ஆக காட்டப்பட்டிருந்தது. ஆகவே, கையிலுள்ள இருப்புக்களின் மீதி ரூபா 1,684,409 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

ரூபா 11,863,654 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி தெளிவாக்குவதற்கு நடவடிக்கை ஏடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 6,161,644 ஆன மொத்த தொகைகள் 2003 இலிருந்து நிலுவையாக இருக்கின்றது. எவ்வாறாயினும், இதனை அறவிடுவதற்கோ அல்லது கணக்குப் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,557,338 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத செலவு மீதிகள் இனங்காணப்பட்டு இவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்காமல் தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளில் பின்வரும் விடயங்கள் பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த விடயங்களின் உள்ளதன்மையை நிரூபிப்பதற்கு எவ்வித ஆவணச்சான்றுகளும் சமர்ப்பிக்காமையால் அந்த கணக்கு விடயங்களை மெய்மையாய்வு செய்வதற்கு எங்களால் இயலாதுள்ளது.

| விடயங்கள் | தொகை<br>ரூபா |
|---|---|
| மின்சார பலகை கையளிப்பு | 5,010,261 |
| முற்பணங்களில் வருமான பற்றுச்சீட்டு | 4,545,638 |
| வருமானத்திற்கு எதிரான வைப்புக்கள் | 4,523,682 |
| முற்கொடுப்பனவுகள் | 1,041,246 |
| செலுத்தப்படாத சம்பளங்கள் | 921,907 |
| நூலக வைப்புக்கள் | 728,707 |
| மின்சார வைப்புக்கள் | 340,145 |
| நிலுவையாகவிருக்கின்ற வேலைகளின் அறவீடு | 108,005 |

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சுட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்ளிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) கிழக்கு மாகாணத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) மா.நி.வி. 433 | சபைக்கு சொந்தமான 38 வாகனங்கள் தொடர்பில் மாதாந்த செயலாற்றல் பொழிப்பு முறைப்படி பராமரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு 06 மாதங்களிற்கு ஒரு தடைவ பரிசொதிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்கு சொந்தமான 38 வாகனங்கள் தொடர்பில் இதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 34,451,959 உடன் ஒப்பிடும் போது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 29,061,043 ஆகும்.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

வட்டி உழைக்கின்ற வங்கிக் கணக்கில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2015 ஆம் அண்டின் போது ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ரூபா 29 மில்லியன் முதல் ரூபா 51 மில்லியன் வரையான வீச்சில் வங்கி மீதிகள் வங்கி நடைமுறைக் கணக்கில் விடப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 40,070 | 36,184 | 86,926 |
| (ii) | குத்தகை வாடகைகள் | 19,220 | 19,847 | 18,781 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,423 | 4,532 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 28,538 | 25,195 | 324 |

### 2.3.2. வாடகை நிலுவைகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்ற முப்பத்து ஐந்து உத்தியோகத்தர்கள் பல ஆண்டுகளாக வாடகைகள் செலுத்தப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 424,593 ஆன நிலுவைகள் இருந்தது. எவ்வாறாயினும், அந்த வடகை நிலுவைகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையானது மரக்கறிச் சந்தை மற்றும் மீன் சந்கைளின் 274 கடைகளை வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 07 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 14,899,765 கூட்டு மொத்தமான வாடகை நிலுவைகள் அவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) ஆறு விடுதிகள் உடன்படிக்கைகள் கைசாத்திடப்படாமல் 2005 இலிருந்து தனியார் தரப்பினருக்கு சபையால் வாடகைக்கு விடப்பட்டிருந்தது.

(ஆ) சபையானது 1990 முதல் 2011 வரையான காமாக உள்ளுராட்சி ஆணையாளர மற்றும் மூன்று அமைச்சுக்களால் நன்கொடையளிக்கப்பட்டிருந்த பதினைந்து வாகனங்களின் உரிமையாண்மையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) குளக்கோட்டத்தில் அமைந்துள்ள ஐந்து அறைகளை கொண்டுள்ள முழுமையான பூர்த்தியாக்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதிகள் திருத்துவதற்கு அல்லது வேறு தேவைகளிற்கு பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 05 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்று இருந்தது.

(ஈ) திருகோணமலை பஸ் தரிப்பிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட கழிவறை 2016 சனவரி 01 இலிருந்து ஒரு ஆண்டிற்காக ரூபா 9,639 மாதாந்த வாடகையில் தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வடாடகைக்குப் பெற்றவரால் கழிவறை முறையாக பராமரிப்படாமையால் பயணிகள் பயன்படுத்துவதற்கு இயலாதிருந்தது என 2016 ஒக்தோபர் 11 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(உ) சபையானது மருத்துவ கழிவுகளை எரிக்கும் நோக்கத்திற்காக எரிதொட்டி வழங்கி பொருத்துவதற்கு ரூபா 2,705,000 ஆக தொகை செலவழித்திருந்தது. எவ்வாறாயினும், மின்சாரம் வழங்கப்படாமை காரணமாக 2015 மார்ச் 10 இல் பொருத்திய திகதியிலிரந்து குறித்த நோக்கத்திற்காக எரிதொட்டி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.1.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 299 கடைகளில், 90 கடைகள் 2011 இலிருந்து பயனற்று இருந்தது. எவ்வாறாயினும், சபையானது தற்போதுவரை அந்த கடைகளை வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன்விளைவால், சபையானது அண்ணளவாக ரூபா 2,000,000 மொத்த வருடாந்த வருமானத்தை இழந்திருந்தது.

(ஆ) சபையானது மீளாய்வாண்டின் போது வாடகைக்கு விடப்பட்டிருந்த 26 கடைகளிலிருந்து எந்தவொரு தொகையையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நகர சபை கட்டளையின் 164(2) ஆம் பிரிவின் பிரகாரம், சபையின் அதிகார எல்லைக்குள் செயற்படுகின்ற விடுதிகளிலிருந்து அந்த விடுதிகளின் மொத்த வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வரிகள் சேகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், சபையானது 2015 ஆண்டிற்காக நான்கு விடுதிகளிலிரந்து அந்த வருமானத்தை அறவிடுவதற்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவால், சபையானது அண்ணளவாக ரூபா 530,519 தொகையான வருமானத்தை இழந்திருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

### 3.2.1 இரவு மண் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம்

சபையானது ரூபா 6,401,355 ஒப்பந்த பெறுமதியில் இரவு மண் சுத்திகரிப்பு பொறியொன்றை நிர்மாணிப்பதற்கு 2012 சனவரி 28 இல் ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்தகாரர் ரூபா 4,485,156 தொகையான பட்டியலிற்கு கொடுப்பனவு பெறுவதற்கு முன்னர் நிர்மாண வேலைகளை கைவிட்டிருந்தார். எவ்வாறாயினும், சபையானது ஒப்பந்தகாரரை கறுப்பு (வங்குரோத்து) பட்டியலிற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஒப்பந்தகாரர் மேற்குறிப்பிப்பட்டவாறு இடைநடுவில் வேலையை கைவிட்டிருந்தார். உள்ளூராட்சி திணைக்களத்தின் மாகாண பொறியியலாளர் முழு நிர்மாண வேலைகளும் திருப்திகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என 2014 நவம்பர் 20 ஆந் திகதிய அவருடைய கடிதத்தில் சான்றுபடுத்தியிருந்தார். இதன்படி, சபையானது ஒப்பந்தகாரருக்கு ரூபா 304,491 ஆன பிடி காசினை விடுவித்திருந்தது.

(இ) முறையான சாத்திய வளக் கற்கைகள் மேற்கொள்ளாமல் ஒப்பந்தம் வழங்கியமையால் இந்த நிர்மாண வேலைகள் தொடர்பில் செவலித்த முழுத் தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது.

### 3.2.2 மின்சார வேலித் தடுப்பு

காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கு மண் கழிவு சுத்திகரிப்பு பொறியை சுற்றி மின்சார வேலித் தடுப்பிற்கு 2014 யூன் 20 இல் ரூபா 893,060 ஒப்பந்த பெறுமதியில் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒப்பந்தம் சபையால் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) குறிப்புரைகள் மற்றும் படவரைபுகளின் பிரகாரம், வேலித் தடுப்பிற்காக நாட்டப்பட்ட இரண்டு மரக் கம்பங்களிற்கு இடையிலான இடைத்தூரம் 4 மீற்றர் இருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர், 33 மீற்றர் இடைவெளியுடன் மரக் கம்பங்களை நாட்டியிருந்தார். இதன் விளைவால், மின்சார வேலிகளிற்காக பொருத்தப்பட்ட 03 இடுக்கு வயர்கள் ஒவ்வொன்றும் மற்றதுடன் முட்டியிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரரால் பொருத்தப்பட்ட அதிகமான கம்பங்கள் மின்சார வேலிக்கு மின்சாரம் வழங்காமை காரணமாக பொருத்திய திகதியிலிருந்து காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தது.

(இ) மரக் கம்பங்கள், வயர்கள் போன்றன மின்சார வேலி தடுப்பிற்காக பயன்படுத்தப்பட்ட முழு பொருட்களும் தெரியாத நபர்களால் அகற்றப்பட்டிருந்தமை 2015 ஒக்தோபர் 15 இல் மேற்கொள்ளப்பட்ட கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்டது. ஆகவே, அந்த வேலைகளிற்காக செலவழித்த ரூபா 618,858 ஆன மொத்த தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

### 3.2 சுற்றுச்சூழல் விடங்கள்

1980 இக் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம்,(1980 இன் 55 ஆம் இலக்க திருத்திய அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டம்), உரிய அதிகாரிகளில் சுற்றுச்சுழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் எரிபொருள் நிரப்பு நிலையங்கள், சீமெந்து வேலைகள், தச்சு வேலைகள், வாகனம் திருத்தும் இடம், அரிசி ஆலைகள் போன்ற வர்த்தக வருகைகள் செயற்படுகின்றன. எவ்வாறாயினும், சபையானது சுற்றுச்சுழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை கருத்திற்கொள்ளாமல் இந்த வருகைக்காக வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்களின் தாமதத்தின் பின்னர் 2016 செப்தெம்பர் 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஒக்தோபர் 01 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் 16 சதவிதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என குறிபிப்படுகின்றது.

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான பத்தொன்பது வாகனங்கள் அவற்றினை திருத்துவதற்கோ அல்லது ஏலவிற்பனை மூலம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 01 ஆண்டு முதல் 07 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலமாக அலுவலக வளவில் பயனற்ற விடப்பட்டிருந்தது.

**4.3.2 கணிப்பீட்டுச் சபை குழுவால் செய்யப்பட்ட சிபார்சுகளின் அமுலாக்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டுச் சபையானது ஏல விற்பனை மூலம் 222 விடயங்களை விற்பதற்கும், 203 பொருள் விடயங்கள் மற்றும் நூலக புத்தகங்களை கைதவிர்ப்பதற்கும் 430 பொருள் விடயங்கள் மற்றும் நூலக புத்தகங்களை திருத்துவதற்கும் சிபார்சு செய்திருந்தது. எவ்வாறாயினும், அந்த சிபார்சகள் 2016 ஒத்தோபர் 10 வரை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணப்பீட்டுக் சபை 1,652 நூலக புத்தகங்களின் குறைவை வெளிப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவம் நூலக புத்தகங்களின் குறைவிற்காக பொறுப்புடைய உத்தியோகத்தரிற்கு எதிராக தற்போது வரை அவசியமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 மனிதவள முகாமைத்துவம்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் வகுதி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 03 | 01 | 02 | - |
| மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| இரண்டாம் நிலை | 94 | 50 | 44 | - |
| சிற்றூழியர் தரம் | 186 | 282 | - | 96 |
| ஏனையவை (அமைய/ தற்காலிகம்) | - | 66 | - | 66 |
| மொத்தம் | 285 | 401 | 46 | 162 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றனன.

(அ) சபையின் கணக்காளர் பதவி 10 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிடமாக இருந்தது. எவ்வாறாயினும், இந்த பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுகாதார மேற்பார்வையாளர், மருத்துவிச்சி, பொது சுகாதார பரிசோதகர், மொழிபெயர்ப்பாளர், தொழில்நுட்ப எத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், மோட்டார் மனிதன் மற்றும் தீயணைப்பு உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்காக நிலவிய வெற்றிடங்கள் 2015 ஒக்தோபர் 10 கணக்காய்வு திகதிவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 5. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை | கணக்காய்விற்காக கிடைத்திருக்காத சான்றுகள் |
|---|---|
| கணக்கீடு | முறையற்ற பேரேட்டு பராமரிப்பு மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் மற்றும் வருமானம் பதியப்படாமை |
| பாதீட்டுக் கட்டுப்பாடு | வருமானம் மற்றும் செலவினத்தை முன்னுணராமல் பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல் |
| வருமான நிர்வாகம் | வருமான நிலுவைகளின் சேகரிப்பில் நீண்ட தாமதம் |
| மனிதவள முகாமைத்துவம் | பிரதான பதவிகளிற்காக வெற்றிடங்களை நிரப்புவதில் நீண்ட தாமதம் |
| ஒப்பந்த நிர்வாகம் | நிர்மாண வேலைகளை கைவிட்ட ஒப்பந்தகாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை |